தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.04.2013 A.M**

---

## மாவட்டம் முழுவதும் கோடை மழைக்கான வாய்ப்பு

நாமக்கல் மாவட்டம் முழுவதும் கோடை மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஏப்.20 முதல் ஏப்.23 வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் 4 முதல் 5 மிமீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 3 கிமீ முதல் 4 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும்.

வெப்பநிலை குறைந்தபட்சம் 77 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 104 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 29 சதம் முதல் அதிகபட்சம் 66 சதம் வரையும் இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: நாமக்கல் மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே கோடை மழைக்கான வாய்ப்புள்ளது.

இதனால், வெப்ப அளவு உயர்ந்து காணப்பட்டாலும் கோழிகளிடையே வெப்ப அயற்சி குறையக் கூடும். கோடை வெப்பத்தை எதிர்கொள்ள உதவும் முறைகளை தீவனத்திலும், கோழி மனைகளிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல் மூச்சுக்குழல் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது.

தவிர, இந்த ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்ட குடிநீரில் அதிகளவு நுண் கிருமிகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, பண்ணையாளர்கள் கோடை கால பராமரிப்பு, பண்ணை உயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் குடிநீரை சுத்தப்படுத்த தக்க கிருமிநாசினிகளையும் பயன்படுத்த வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:தற்போது மூன்று மாத கால வயதுடைய மரவள்ளிச் செடிகளில் இரும்புச் சத்து பற்றாக்குறையால் இலைகள் வெளிறிக் காணப்படும்.

இதை நிவர்த்தி செய்ய இலை வழியாக இரும்பு சல்ஃபேட் என்ற நுண்ணூட்ட மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற அளவிலும், ஒரு மில்லி ஒட்டும் திரவத்துடனும் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.95 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 24.95 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## "மானியத்தில் பருத்தி எடுக்கும் இயந்திரம் விநியோகம்'

அரியலூர் மாவட்ட விவசாயிகள் வசதிக்காக மானியத்தில் பருத்தி எடுக்கும் இயந்திரம் விநியோகம் செய்யப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு தலைமை வகித்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்து ஆட்சியர் பேசியது:

குறுவை பருவத்திற்கு ஏற்ற ஆடுதுறை 36 மற்றும் 5 ஆகிய விதைகள் தேவையான அளவும், நன்செய் தரிசில் உளுந்து பயிர் சாகுபடி செய்ய 5 டன் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. யூரியா 375 மெ.டன், டி.ஏ.பி. 225 மெ.டன், பொட்டாஷ் 185 மெ.டன், கலப்பு உரங்கள் 395 மெ.டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பு உள்ளது. ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் ரூ. 45,000 மானியத்தில் பவர் டில்லர், ரோட்டவேட்டர் ரூ. 20 ஆயிரத்திலும், களைகளை எடுக்கும் கருவி ரூ. 1500 மானியத்திலும், பருத்தி மினி மிஷன் 2 திட்டத்தின் கீழ் ரூ. 1363 மதிப்பில் பருத்தி எடுக்கும் இயந்திரம் மானியத்தில் விநியோகம் செய்யப்பட உள்ளது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தி மற்றும் நிலக்கடலை இயக்கம் திட்டத்தின் கீழ் 50 சதவித மானியத்தில் களைக்கொல்லி, நுண்ணூட்ட உரம், உயிர் உரம் விநியோகம் செய்யபட உள்ளது. எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி பயன் பெறலாம்.

ஊராட்சி கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளம், குட்டை ஆகியவற்றை 100 நாள் வேலை திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலம் தூர் வாரும் பணிக்காக,

ஏப். 23-ம் தேதி ஊராட்சித் தலைவர்களுடன் கலந்தாய்வு கூட்டம் செந்துறையில் காலை 10 மணிக்கும், ஆண்டிமடம் வட்டாரத்ததில் 12 மணிக்கும் நடைபெற உள்ளது.

இதில் ஊராட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு தங்களது ஆலோசனைகள் வழங்கலாம். அரியலூர் ஒழுங்குமுறை விற்பனை மையத்தில் மக்காச்சோளம் கிலோ ரூ. 13.40-க்கும், சோளம் கிலோ ரூ. 13.97க்கும், கடலை கிலோ ரூ. 45.20-க்கும், ஆமணக்கு கிலோ ரூ. 33.26-க்கும், மிளகாய் கிலோ ரூ. 74-க்கும் விற்பனையாகிறது. எனவே, விவசாயிகள் தங்களது விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனை செய்து பயன் பெற வேண்டும்.

ஏரிகளில் உள்ள வண்டல் மணல் எடுப்பதற்கு விவசாயிகளுக்கு சட்டப்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், ஏரிகளில் பரவலாக மணல் எடுக்க வேண்டும். மணல் கடத்தலில் ஈடுபட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கருப்பசாமி, துணை இயக்குநர் (தோட்டகலைத் துறை) சுப்பையா, விவசாயி சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு கண்காட்சி:விழுப்புரத்தில் இன்று தொடக்கம்

விழுப்புரத்தில் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பக் கண்காட்சி சனிக்கிழமை தொடங்குகிறது.

திருவண்ணாமலையில் இயங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகள், வேளாண் சார்ந்த தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சனிக்கிழமை (ஏப்ரல் 20) காலை 11 மணிக்கு விழுப்புரம் ரயில் நிலையம் அருகே உள்ள காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில்

இக்கண்காட்சி தொடங்குகிறது. தொடக்க விழாவுக்கு, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகிக்கிறார். கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.

80 அரங்குகள்: இக்கண்காட்சியில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்புத் தொடர்பான 80 அரங்குகள் இடம்பெற்றுள்ளன. தினமும் தொழில்நுட்ப கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன. கால்நடை, கோழி, மீன் வளர்ப்புப் பற்றிய புத்தகங்கள், குறுந்தகடுகள், உபகரணங்கள், தீவனப் பயிர் விதைகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

செல்லப் பிராணிகள் திருவிழா: ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 21) மதியம் 1 முதல் மாலை 6 மணி வரை செல்லப் பிராணிகள் திருவிழா நடைபெறுகிறது. கட்டுடல் அழகு, நடையழகு, புன்னகை அழகு, சிகை அழகு, மாறுவேடம் போன்ற பிரிவுகளில் செல்லப் பிராணிகளின் போட்டிகள் நடைபெறுகின்றன.

எனவே, திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

## போளூரில் திடீர் மழை: 30 ஆயிரம் நெல் மூட்டைகள் நனைந்தன

போளூரில் வெள்ளிக்கிழமை பெய்த திடீர் மழையில் சுமார் 30 ஆயிரம் நெல் மூட்டைகள் நனைந்தன.

போளூரில் உள்ள அரசு அரிசி ஆலைக்கு கொண்டு செல்ல, திருவாரூர் மாவட்டத்திலிருந்து போளூர் ரயில் நிலையத்துக்கு கூட்ஸ் மூலம் வியாழக்கிழமை இரவு 2 ஆயிரம் டன் நெல் மூட்டைகள் வந்திறங்கின. இந்த மூட்டைகள் வெள்ளிக்கிழமை காலை முதல் லாரி மூலம் அரிசி ஆலைக்கு எடுத்து செல்லப்பட்டன. மாலை வரை இப்பணி முடியாததால் மீதி மூட்டைகள் பிளாட்பாரத்திலேயே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் திடீரென கோடை மழை பெய்யத் தொடங்கியதால் சுமார் 20 ஆயிரம் நெல் மூட்டைகள் நனைந்தன. அதே போல போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள 7 சேமிப்புக் கிடங்கிலும் இடமில்லாமல் வெளியே அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 10 ஆயிரம் நெல் மூட்டைகளும் மழையில் நனைந்தன.

இதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர். சிலர் நனைந்த மூட்டைகளை உலர்த்த வீட்டுக்கு எடுத்துச் சென்றனர். சிலர் அங்கேயே மூட்டைகளை பிரித்து உலர வைத்தனர்.

## விவசாயத்துக்கு தடையில்லா மின்சாரம் வழங்கக் கோரிக்கை

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் நலன் கருதி, விவசாயத்துக்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு, ஆட்சியர் விஜய் பிங்ளே தலைமை வகித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசியது:

நகரப் பேருந்துகளில் ஏர் ஹாரன் அடிப்பதை முற்றிலும் தடை செய்ய வேண்டும். வேலூரில் உள்ள திருமலை திருப்பதி தேவஸ்தான மையத்தில் சுவாமி தரிசனத்துக்கு முன்பதிவு செய்வதைப் போல, திருவண்ணாமலையிலும் முன் பதிவு மையம் தொடங்க வேண்டும். விவசாயப் பணிக்கான மும்முனை மின்சாரத்தை தடையின்றி வழங்க வேண்டும் என்றனர்.

இக் கோரிக்கைகள் அனைத்தும் உரிய முறையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் தெரிவித்தார்.

ஆடிப் பட்டத்துக்குத் தேவையான டீலக்ஸ் பொன்னி மற்றும் பொன்னி விதை நெல், பசுந்தாழ் உரங்களை அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரினர்.

இதற்குப் பதிலளித்த வேளாண் இணை இயக்குநர், பசுந்தாழ் உரம் போதிய அளவு இருப்பு உள்ளது. விதை நெல்லும் போதிய அளவு இருப்பு உள்ளதாகத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி, வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜி.சந்திரசேகர், வேளாண் உயர்மட்டக் குழு உறுப்பினர் வேட்டவலம் கே.மணிகண்டன் மற்றும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரத்தில் சனிக்கிழமை தொடங்கி 3 நாள்களுக்கு நடைபெறும் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பக் கண்காட்சியில் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

விழுப்புரத்தில் சனிக்கிழமை தொடங்கி 3 நாள்களுக்கு நடைபெறும் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பக் கண்காட்சியில் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

திருவண்ணாமலையில் இயங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் இக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகள், வேளாண் சார்ந்த தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

சனிக்கிழமை (ஏப்ரல் 20) காலை 11 மணிக்கு விழுப்புரம் ரயில் நிலையம் அருகே உள்ள காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இக் கண்காட்சி தொடங்குகிறது. தொடக்க விழாவுக்கு, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகிக்கிறார். கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைக்கிறார்.

80 அரங்குகள்: இக்கண்காட்சியில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்புத் தொடர்பான 80 அரங்குகள் இடம்பெற்றுள்ளன.

தினமும் தொழில்நுட்ப கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன. கால்நடை, கோழி, மீன் வளர்ப்புப் பற்றிய புத்தகங்கள், குறுந்தகடுகள், உபகரணங்கள், தீவனப் பயிர் விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

செல்லப்பிராணிகள் திருவிழா: ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 21) மதியம் 1 முதல் மாலை 6 மணி வரை செல்லப் பிராணிகள் திருவிழா நடைபெறுகிறது. கட்டுடல் அழகு, நடையழகு, புன்னகை அழகு, சிகை அழகு, மாறுவேடம் போன்ற பிரிவுகளில் செல்லப் பிராணிகளின் போட்டிகள் நடைபெறுகின்றன. எனவே, திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இக் கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று திருவண்ணாமலையில் இயங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

### வறட்சி: தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ரா.கஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் முகம்மது கலிபுல்லா ஷெரீஃப், துணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயி சந்திரசேகர் (கொமுக) பேசியது: திருப்பூர் மாவட்டத்தில் கடும் வறட்சியால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, தென்னை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும். அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை அரசு உடனடியாக நிறைவேற்றி, அவிநாசி பகுதியின் வறட்சி நிலையை போக்க வேண்டும்.

ராஜாமணி (பொதுச்செயலாளர், தீரன் சின்னமலை பேரவை): கெயில் நிறுவனம் இதுவரை விவசாய நிலங்களில் பதித்த குழாய்களை அகற்றவில்லை. இந்தப் பிரச்னையில் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லசாமி (கள் இயக்க ஒருங்கிணைப்பாளர்): காங்கயம் பகுதியில் கடந்த 13 ஆண்டுகளாக தேங்காய் தொட்டியில் கரி சுடும் ஆலைகள் செயல்படுகின்றன.

இந்த ஆலைகளில் வெளியேற்றப்படும் புகையால், அப் பகுதியில் சுற்றுச்சூழல் மாசு அடைகிறது. தேங்காய் தொட்டிக்கரி ஆலைகளை மூட வலியறுத்தி, அப்பகுதி மக்கள் சாலை மறியல், உண்ணாவிரதம் உள்ளிட்ட பல போராட்டங்களை நீண்டகாலமாக நடத்தி வருகின்றனர். இப் பகுதியை ஆட்சியர் நேரில் ஆய்வு செய்து, தொட்டிக்கரி ஆலைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சியர் கு.கோவிந்தராஜ்: இதுவரை 7 ஆலைகளில் 5 ஆலைகளை மூட நடவடிக்கை எடுத்துள்ளேன். மீதி 2 ஆலைகளில் ஒன்றை தமிழக அரசே மூட உத்தரவிட்டுள்ளது. மீதி உள்ள ஒரு ஆலை சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இதில் மாவட்ட நிர்வாகம் தலையிட முடியாது.

மனோகரன் (விவசாயி): சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இந் நிலையில், திருப்பூர் மாவட்டத்தில் தேசிய வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடனுக்கு கூடுதல் வட்டி, அபராத வட்டி வசூலிக்காமல் இருக்க வங்கிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

### கேர்பன் பகுதியில் உழவர் பெருவிழா

தமிழக முதல்வரின் 2-ஆவது பசுமைப் புரட்சி உழவர் பெருவிழா கோத்தகிரியை அடுத்த கேர்பன் பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஊர் தலைவர் தருமன் தலைமை வகித்தார். கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் கா.ராஜேந்திரன் தோட்டக்கலை திட்டங்கள் குறித்து விவரித்தார்.

தோட்டக்கலை துணை இயக்குநர் மணி முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக தோட்டக்கலை இணை இயக்குநர் க.மோகன் கலந்துகொண்டு, உழவர் பெருவிழாவின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

400-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் தம்பிராஜ் நன்றி கூறினார்.

### ஏப்.26இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஏப்ரல் 26ஆம் தேதி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. அனைத்து விவசாயிகளும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### உழவர் பெருவிழா

திருக்கோவிலூர் அருகே தி.அத்திப்பாக்கம் கிராமத்தில் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் இதர துறைகளின் சார்பில் இவ்விழா நடத்தப்பட்டது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் ஆர்.துளசிராஜா, வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தனர்.

வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் சாத்தையா, டாக்டர் ராமசுப்பிரமணியம், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் டாக்டர் குபேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் எஸ்.தங்கராஜ், ஆத்மா திட்டத் தலைவர் கங்காதரன் பேசினர். விளம்பர ஊர்தி மூலம்

தொழில்நுட்ப விளம்பரம் செய்யப்பட்டது. அனைத்து விவசாயிகளுக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, ஆத்மா மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் செந்தில்குமார், சிவநேசன், வெங்கடகிருஷ்ணன், திருமலை, சிவக்குமார், வெங்கடேசப்பெருமாள் ஆகியோர் செய்திருந்தனர்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

விவசாய குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்ற வேளாண்மை அதிகாரிகள், உழவர் பெருவிழா நடத்தி வருவது குறித்து தகவல் தெரிவித்தனர்.

மேலும் விவசாயிகள், தங்களுடைய நில விவரம் மற்றும் இதர விவரங்களை படிவம் 1-ல் பூர்த்தி செய்து மண் மாதிரியை தொடர்புடையை வேளாண்மை உதவி இயக்குநரிடம் வழங்கினால் அந்நிலத்தில் பயிர் செய்யத் தகுந்த பயிர்களின் விவரங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

கோரிக்கைகள்: இதையடுத்து கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். விழுப்புரம் மாவட்டம் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, உரிய ஆய்வு நடத்தி வறட்சி நிவாரணம் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் உள்ள நிதியைப் பயன்படுத்தி மாவட்டத்தில் உள்ள கிணறு, ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயத்துக்கு கூடுதல் நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் கரும்பு பயிருக்கு தேவையான "சூப்பர் பாஸ்பேட்' மற்றும் "பொட்டாஷ்' உரங்களை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெல் வரத்து தற்போது அதிகரித்துள்ளதால் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பிருந்தாதேவி, வேளாண்மை துணை இயக்குநர் எச்.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சு.ராஜேந்திரன், விழுப்புரம் மின்வாரியக் கண்காணிப்புப் பொறியாளர் மா.அசோகன், கள்ளக்குறிச்சி கண்காணிப்புப் பொறியாளர் ராமசாமி, மண்டல கால்நடை இணை இயக்குநர் கே.அழகரசன் உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு கண்காட்சி:விழுப்புரத்தில் இன்று தொடக்கம்

விழுப்புரத்தில் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பக் கண்காட்சி சனிக்கிழமை தொடங்குகிறது.

திருவண்ணாமலையில் இயங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகள், வேளாண் சார்ந்த தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சனிக்கிழமை (ஏப்ரல் 20) காலை 11 மணிக்கு விழுப்புரம் ரயில் நிலையம் அருகே உள்ள காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இக்கண்காட்சி தொடங்குகிறது. தொடக்க விழாவுக்கு, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகிக்கிறார். கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைக்கிறார்.

80 அரங்குகள்: இக்கண்காட்சியில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்புத் தொடர்பான 80 அரங்குகள் இடம்பெற்றுள்ளன. தினமும் தொழில்நுட்ப கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன. கால்நடை, கோழி, மீன் வளர்ப்புப் பற்றிய புத்தகங்கள், குறுந்தகடுகள், உபகரணங்கள், தீவனப் பயிர் விதைகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

செல்லப் பிராணிகள் திருவிழா: ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 21) மதியம் 1 முதல் மாலை 6 மணி வரை செல்லப் பிராணிகள் திருவிழா நடைபெறுகிறது. கட்டுடல் அழகு, நடையழகு, புன்னகை அழகு, சிகை அழகு, மாறுவேடம் போன்ற பிரிவுகளில் செல்லப் பிராணிகளின் போட்டிகள் நடைபெறுகின்றன.

எனவே, திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

## ஆண்டிக்குப்பத்தில் உழவர் பெருவிழா

பண்ருட்டி வட்டாரம் ஆண்டிக்குப்பம் கிராமத்தில் உழவர் பெருவிழா வியாழக்கிழமை நடந்தது.

வார்டு கவுன்சிலர் ரமேஷ் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சங்கர் பேசினார். துணை வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரம் மண் மாதிரி மற்றும் உழவர் ஒருங்கிணைந்த கையேடு குறித்து விளக்கிப் பேசினார்.

விவசாயம் தொடர்பான அனைத்து விவரங்கள், தொழில்நுட்பங்கள், நவீன வேளாண் முறைகள் குறித்து கண்காட்சிகள் மற்றும் செயல்விளக்கங்கள் மூலம் விளக்கப்பட்டது. இதேபோல் சிறுவத்தூர் கிராமத்திலும் உழவர் பெருவிழா அட்மா குழு தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடந்தது.

## "மாவட்டத்தில் வேளாண் பரப்பு குறைந்து வருகிறது'

கடலூர் மாவட்டம் போல் வளமான மாவட்டம், இந்தியாவில் எங்கும் கிடையாது என தமிழக அரசு வேளாண்துறை துணை இயக்குநர் (சிறப்புத் திட்டங்கள்) கா.இளங்கோ தெரிவித்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புலத்தில் புதன்கிழமை நடைபெற்ற உழவர் தின விழாவில் அவர் பேசியது:

கடலூர் மாவட்டத்தில் வேளாண் பரப்பு குறைந்துள்ளது. 3 லட்சத்து 43 ஆயிரம் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தன.

தற்போது 3 லட்சத்து 2 ஆயிரமாக குறைந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் உள்ள நீராதார அமைப்புகள் எங்கும் கிடையாது.

காவிரி, வெள்ளாறு, வீராணம், வெலிங்டன் உள்ளிட்ட ஆறு, ஏரி, போர்வெல் பாசனங்கள் அனைத்தும் கலந்துள்ளது. ஒரே ஒரு சிரமம் என்னவென்றால் அனைத்து வித இயற்கை இடர்பாடுகள் உள்ள மாவட்டமும் கடலூர் மாவட்டம்தான்.

மாநில அளவிலான விளைச்சல் போட்டியில் குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த விவசாயிகள் பச்சபயிறு சாகுபடியில் அதிக விளைச்சல் செய்து மாநில அளவில் இரண்டாம் இடத்தையும், கம்பு சாகுபடியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் வறட்சிக்கு பிறகு இரண்டு மடங்கு மகசூல் கிடைத்துள்ளது என கா.இளங்கோ தெரிவித்தார்.

ஹைதராபாத் சர்வதேச வறண்டநில பயிர் ஆய்வு நிலைய முதன்மை செயலாக்க அதிகாரி எஸ்.எம்.கருப்பன்செட்டி பேசியது:

தொழில்ரீதியாக விவசாயிகளுக்கு சென்றடையும் நடவடிக்கை மேற்கொள்ள இந்தியா முழுவதும் 10 பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஓராண்டில் பயிற்சி மையம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஹைட்ரோஜெல் தொழில்நுட்பம் மூலம் நீரை சேமிக்கலாம், செல்போன் மூலம் நீராதார முறைகளை இயக்கி கட்டுப்படுத்தலாம் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என எஸ்.எம்.கருப்பன்செட்டி தெரிவித்தார்.

விழாவிற்கு வேளாண்புல முதல்வர் ராம.கதிரேசன் தலைமை வகித்தார். வேளாண் விரிவாக்கத் துறைப் பேராசிரியர் கனகசபாபதி வரவேற்றார். பேராசிரியர் தியாகராஜன் நன்றி

கூறினார்.

நகர பிரமுகர் ஆர்.கே.சிவக்குமார், முன்னாள் மொழியியல் புல முதல்வர் நடனசபாபதி, முன்னாள் வேளாண்புல முதல்வர் நாராயணசாமி, முன்னாள் பேராசிரியர் பன்னீர்செல்வம், உழவர் மன்ற கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன், தோட்டக்கலைத் துறைத் தலைவர் கே.மணிவண்ணன், உதவிப் பேராசிரியர் ராஜ்பிரவீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உழவர் தின விழாவை முன்னிட்டு வேளாண் புல வளாகத்தில் வேளாண் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

## டெல்டா பகுதி அல்லாத விவசாயிகளுக்கு ரூ.1,755 கோடிக்கு நிவாரண உதவி: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு



டெல்டா அல்லாத பிற மாவட்டங்களின் விவசாயிகளுக்கு ரூ.1,755 கோடிக்கு நிவாரண உதவிகளை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். மேலும், 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் பாதித்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் அளிக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ், முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை படித்தளித்த அறிக்கை:-

டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், நிதியமைச்சர் தலைமையில் உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு 18 மாவட்டங்களில் தனது ஆய்வினை மேற்ண்டது. இந்தக் குழுவின் ஆய்வு மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி, டெல்டா அல்லாத மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சலுகைகளை பேரவையில் அறிவிக்கிறேன்.

டெல்டா அல்லாத மாவட்டங்களில் 50 சதவீதத்துக்கு மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

இதன்படி, 6 லட்சத்து 25 ஆயிரத்து 481 விவசாயிகளின் 6 லட்சத்து 25 ஆயிரத்து 786 ஏக்கர் பயிர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். இதனால், அரசுக்கு ரூ.312.89 கோடி செலவு ஏற்படும்.பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையை நேரடியாக வழங்கும்.

பாசன ஆதாரமுள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொருத்தவரை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வழங்கப்படும்.

இதன்படி, பாசன ஆதாரமுள்ள நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத பயிர்களை சாகுபடி செய்து 50 சதவீதத்துக்கும் மேல் மகசூல் பாதித்துள்ள ஒரு லட்சத்து ஆயிரத்து 802 விவசாயிகளின் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 386 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் இழப்பீடு அளிக்கப்படும்.

பாசன ஆதாரமற்ற நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களில் மகசூல் பாதித்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் அளிக்கப்படும். இதன்படி, 10 லட்சத்து 5 ஆயிரத்து 549 விவசாயிகளின் 14 லட்சத்து 14 ஆயிரத்து 126 ஏக்கர் பயிர்களுக்கு ரூ.424.24 கோடி இழப்பீடாக அளிக்கப்படும்.

தென்னை விவசாயிகள்: தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களின் மகசூல் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வழங்கப்படும். அதன்படி, நீண்ட கால பயிர்களைச் சாகுபடி செய்த 50 ஆயிரத்து 908 விவசாயிகளின் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 383 பயிர்களுக்கு ரூ.43.35 கோடி இழப்பீடு வழங்கப்படும்.

மல்பெரி அதாவது முசுக்கொட்டை சாகுபடி செய்து 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 3 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும். அதன்படி, 10 ஆயிரத்து 602 விவசாயிகளின் 15 ஆயிரத்து 262 ஏக்கர் பயிர்களுக்கு ரூ.4.58 கோடி நிவாரணம் அளிக்கப்படும்.

மொத்தத்தில், தமிழகத்தில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் 50 சதவீதத்துக்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17 லட்சத்து 94 ஆயிரத்து 342 விவசாயிகளுக்கு ரூ.835.21 கோடி நிவாரணமாக வழங்கப்படும்.

தீவனப் பற்றாக்குறை: வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவன பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், ரூ.6.25 கோடிக்கு பசுந்தீவனம், ரூ.18.40 கோடிக்கு உலர்தீவனம் என ரூ.24.65 கோடி மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், முதல் கட்டமாக ரூ.145 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தி0ன் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக ரூ.750 கோடி மதிப்பில் 50 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும்.

டெல்டா அல்லாத பிற மாவட்டங்களுக்கென இப்போது ரூ.1,754.86 கோடிக்கான நிவாரண உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே வறட்சிக்காக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது இதுதான் முதல்முறை என தனது அறிவிப்பில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

**மத்திய அரசிடம் ரூ.19,665 கோடி வறட்சி நிவாரணம் கோரிக்கை**

மத்திய அரசிடம் ரூ.19 ஆயிரத்து 665 கோடிக்கு வறட்சி நிவாரண கோரிக்கைகளை தமிழக அரசு முன்வைக்கும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

**சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ், அவர் வெள்ளிக்கிழமை படித்தளித்த அறிக்கை:-**

தமிழகத்தின் சார்பில் வறட்சி கோரிக்கை மனு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பப்படும். இந்த வறட்சி கோரிக்கை மனுவில், வேளாண்மைத் துறையில் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதற்காக ரூ.9 ஆயிரத்து 286.20 கோடியும், விவசாயிகள் பெற்ற கூட்டுறவு கடன்களை மாற்றியமைத்த வகையில், கூட்டுறவுத் துறைக்கு ரூ.182.10 கோடியும், விவசாயிகளுக்கு பயிர் இழப்பு நிவாரணம் வழங்கிய வகையில், மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவினத்துக்காக ரூ.1,376.71 கோடியும், வேளாண்மை தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுக்காக ரூ.2, 424.47 கோடியும், மின்சாரத் துறைக்கு ஏற்பட்ட இழப்பீடாக ரூ.2,661.32 கோடியும், வனவிலங்குகளை பாதுகாக்க ரூ.5 கோடியும், குடிநீர் வழங்கல் பணிகளுக்காக ரூ.1,195.79 கோடியும், கால்நடை பராமரிப்பு துறைக்கென ரூ.247.16 கோடியும், பண்ணை குட்டை மீன் வளர்ப்புக்கென ரூ.12.47 கோடியும், நீர்வள ஆதார அமைப்புக்கென ரூ.1,390.31 கோடியும், கூடுதல் சத்துணவு வழங்க ரூ.333.60 கோடியும், பொது விநியோகத் திட்டத்துக்கென 7.92 லட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் ரூ.500 கோடி என மொத்தம் ரூ.19 ஆயிரத்து 665.13 கோடி நிவாரண உதவி கோரிக்கைகள் முன்வைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

**18 மாவட்டங்கள் எவை?**

டெல்டா அல்லாத 18 மாவட்டங்களில் நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்கள் குழு நடத்திய களஆய்வின் அடிப்படையில் பத்து அம்சங்களைக் கொண்ட திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

ரூ.1,754 கோடி மதிப்பிலான இந்தப் புதிய திட்டங்கள் 18 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. அந்த மாவட்டங்களின் விவரம்:-

மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், சேலம், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி.

எந்தெந்த தேதிகளில் ஆய்வு? இந்த மாவட்டங்களில் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் ஆகியவற்றில் கடந்த மார்ச் 16 மற்றும் 17 ஆம் தேதிகளிலும், சேலம், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களில் கடந்த மார்ச் 22 ஆம் தேதியன்றும், திருநெல்வேலி, தேனி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏப்ரல் 11 ஆம் தேதியும், கரூர், பெரம்பலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கடந்த 12 ஆம் தேதியும் கள ஆய்வுகளை அமைச்சர்கள் குழு நடத்தியது.

இன்றைய வேளாண் செய்திகள்

20.04.2013 A.M

## சூறைக்காற்றுடன் மழை15 ஏக்கர் வாழை சேதம்:மரம் விழுந்து பசு பலி

திண்டுக்கல்:திண்டுக்கல் தோட்டனூத்து பகுதியில் சூறாவளி காற்றுடன் பெய்த மழையால், 15 ஏக்கர் வாழை மரங்கள் சேதமடைந்தன.போதிய பருவமழை இல்லாத சூழலில், தோட்டனூத்து பகுதியில் பல விவசாயிகள் வாழை சாகுபடியை நம்பியிருந்தனர். நல்லமநாயக்கன்பட்டி, புளியம்பட்டி பகுதியில், 60 ஏக்கர் பரப்பில், ரஸ்தாளி, நாட்டு வாழை அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தன. நேற்று முன்தினம் இப்பகுதியில் சூறாவளி காற்றுடன், கனமழை பெய்தது. இதில், வாழை, தென்னை, மா மரங்கள் சேதமடைந்தன.

ஜேம்ஸ், ஜோசப், அருள்சாமி, செல்வம், ராமபிள்ளை உள்ளிட்ட விவசாயிகளுக்குச் சொந்தமான, 15 ஏக்கர் பரப்பிலான வாழை முற்றிலும் சேதமடைந்தன. பல லட்ச ரூபாய் மதிப்பிலான சேதத்தால், கடன் வாங்கி சாகுபடி செய்திருந்த விவசாயிகள் பாதிப்படைந்தனர்.தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் ஆஸ்பான், துணை வேளாண்மை அலுவலர்(பொறுப்பு)முருகரசு உள்ளிட்ட அதிகாரிகள், பாதிப்பு பகுதிகளில் ஆய்வு செய்தனர்.

* புளியம்பட்டியைச் சேர்ந்த அமலோற்பம், தனது பசுமாட்டை தென் னை மரத்தடியில் கட்டி வைத்திருந்தார். சூறாவளியில் மரம் ஒடிந்து விழுந்ததில், பசு இறந்தது.* குஜிலியம்பாறை பகுதியில் நேற்று முன்தினம் வீசிய சூரைக்காற்றில், ஏராளமான மரங்கள் சாய்ந்தன. வண்ணாணூரை சேர்ந்தவர் தண்டபாணி,45. இவர் தோட்டத்தில், 3 ஏக்கர் பரப்பளவில், வாழை மரங்கள் சாய்ந்து விட்டன. * கருங்குளத்தை சேர்ந்தவர் வேலுச்சாமி,50. இவர் இரண்டரை ஏக்கரில், வாழை நடவு செய்துள்ளார். இவரது தோட்டத்திலும், பெரியகுளத்தை சேர்ந்த

கோபால்சாமி,52, என்பவரது தோட்டத்திலும், நடவு செய்திருந்த, தலா இரண்டரை ஏக்கர் வாழை சேதம் அடைந்தது.

## அறுவடை நேரத்தில் மழை, காற்றால் வீணாகிய நெல்

பழநி:பழநி வட்டாரத்தில், அறுவடை நேரத்தில், இரண்டு நாட்களாக, சூறாவளி காற்றுடன் பெய்ந்த மழையால், பல லட்ச ரூபாய் மதிப்புள்ள, நெற்கதிர்கள் சரிந்து, ஈரப்பதத்தால் வீணாகியுள்ளது. இவ்வாண்டு போதிய மழையில்லாததால், பழநி வட்டாரத்தில் விவசாயப்பணிகள் குறைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அணைக்கட்டு, கிணற்றுபாசன விவசாயிகள், வண்டிவாய்க்கால், அ.கலையம்புத்தூர், வையாபுரிகுளத்துக்கரை, பழநி-உடுமலை ரோடு ஆகியப் பகுதிகளில், ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து, நெல் நடவுப்பணிகளை மேற்கொண்டனர். அவை தற்போது அறுவடை பருவத்தை எட்டியுள்ளன. இந்நிலையில் ஏப். 17,18ல் ஆகிய இரண்டு நாட்களாக, பழநி வட்டாரத்தில் பலத்த காற்று இடியுடன், மழை பெய்ந்தது. 16 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இதனால் அறுவடை பருவத்தில் உள்ள, நெற்கதிர்கள், சரிந்து, நெல்மணிகள் உதிர்ந்துள்ளது. வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளதாலும், கதிர்களில் ஈரப்பதம் காரணமாகவும், அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. நூறு சதவீத (விளைச்சல்) பலன் கிடைக்கும், என எதிர்பார்த்த விவசாயிகளுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
விவசாயி குணசேகரன் கூறுகையில்," 300 ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் செய்து, அறுவடைக்கு தயாராகும் நேரத்தில், மழை,காற்று காரணமாக, நெற்கதிர்கள் சாய்ந்தும் வீணாகியுள்ளது. ஈரப்பதத்தால் அறுவடை பணியை மேற்கொள்ள முடியவில்லை. கூலியாட்கள் கிடைக்காததால், அறுவடை மிஷின் வாடகைக்கு எடுத்துள்ளோம்., நூறு சதவீதம் எதிர்பார்த்த விளைச்சலில், தற்போது 30 சதவீதம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது,' என்றார்.

## கோடை வெயிலை குளிர்வித்த மழை ஈரோடு மாவட்டத்தில் 218.3 மி.மீ., பதிவு

ஈரோடு: கோடையில் கடும் வெயிலின் தாக்கத்துக்கு இடையே, நேற்று முன்தினம் ஈரோட்டில் மழை பெய்தது. அதிகபட்சமாக கோபியில், 83 மி.மீ., மழையும், மாவட்டம் முழுவதுமாக, 218.3 மி.மீ., பதிவாகியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் கடந்த, 2011 டிசம்பர் மாதத்துக்குப்பின், காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் பருவமழை, கோடை மழை என அனைத்தும் பொய்த்து வறட்சி நிலவுகிறது.ஓராண்டாக மழையில்லாததால், அணைகள், ஏரி, குளங்களில் தண்ணீர் வற்றிப்போனது. நீர் நிலைகள் வற்றியதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, பல மாவட்டங்களில் தண்ணீர் தட்டுப்பாடு துவங்கியுள்ளது.கடந்தாண்டை போலவே, நடப்பாண்டும் ஃபிப்ரவரி துவக்கத்திலேயே கடும் வெயில் அடிக்க துவங்கியது. மார்ச் மாதத்தில்

அக்னி நட்சத்திரம் போல வெயிலின் தாக்கம் தொடர்ந்தது.ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக, பகலில், 102 டிகிரிக்கு மேல் வெயிலும், மாலை நேரத்தில் கருமேகம் சூழ்ந்து வந்து, கலைந்து ஏமாற்றிச்சென்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலையில் திடீரென மேகங்கள் சூழ்ந்து மழை பெய்தது. 45 நிமிடங்கள் வரையில், வேகமாகவும், தூரலாகவும் மாறிமாறி மழை பெய்தது. நகரில், 11 மி.மீ., மழை பதிவானது.மாவட்டத்தில் எலந்தக்குட்டையில், 10.5 மி.மீ., மழையும், கவுந்தப்பாடி 3.4, பெருந்துறை 49, பவானி 1, ஓலப்பாடி 21, புங்கப்பாடி 6, மொடக்குறிச்சி, 10, அரச்சலூர், 21, பவானிசாகர் அணை, 2.4 மற்றும் அதிகபட்சமாக கோபியில், 83 மி.மீ., மழை பதிவானது.ஒட்டுமொத்தமாக மாவட்டம் முழுவதுமாக, 218.3 மி.மீ., மழை பதிவானது. நீண்ட நாட்களுக்கு பின் மழை பெய்ததால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர். இந்த திடீர் மழையால், ஈரோடு நகரில் நேற்று வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

### குன்னூர் வட்டத்தில் உழவர் பெருவிழா

குன்னூர் : குன்னூர் வட்டத்தில் 9 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா கடந்த 14ம் தேதி துவங்கி ஒரு மாத காலம் நடக்கிறது.

எடப்பள்ளி கிராமத்தில் நடந்த விழாவுக்கு,தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ் விவசாயிகளுக்கு வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

பின்னர் உலிக்கல், பேரட்டி, மேலூர், கேத்தி வருவாய் கிராமத்துக்கு உட்பட்ட கெக்கட்டி, உபதலை பெரிய பிக்கட்டி சமுதாய கூடத்திலும் விழா நடந்தது. இன்று ஜெகதளா காரகொரை சமுதாய கூடத்திலும், 21ம் தேதி அதிகரட்டி வருவாய் கிராமத்தில் தாம்பட்டி சமுதாய கூடத்திலும், 22ம் தேதி பர்லியார் வருவாய் கிராமத்துக்கு உட்பட்ட கோடமலை ஒசட்டி சமுதாயகூடத்தில் உழவர் பெருவிழா நடக்கிறது.

உழவர் பெருவிழாவை முன்னிட்டு, வேளாண்மை திட்டங்கள் குறித்து விளக்கும் வகையிலான, கண்காட்சி வாகனம் அனைத்து கிராமங்களுக்கும் செல்கிறது.

### உரம் கிடைக்காமல் அவதி: விவசாயிகள் புகார்

விழுப்புரம் : கூட்டுறவு சங்கங்களில் தேவையான உரங்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்ப்புக் கூட்டம் நேற்று காலை நடந்தது. டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி தலைமை தாங்கினார். இதில் கலந்து கொண்ட விவசாயிகள்

பேசியதாவது:

கடவம்பாக்கம் மணி பேசுகையில், தற்போது அரசு சார்பில் வேளாண் துறை நடத்தும் உழவர் பெருவிழாவில், மற்றத் துறைகள் கலந்து கொள்வது இல்லை. இதனால் விவசாயிகளுக்கு தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை என்றார்.

ஆனாங்கூர் கலியபெருமாள் பேசுகையில், நெல் அறுவடை அதிகம் உள்ள பகுதிகளில் அரசின் நேரடி நெல் கொள் முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்றார்.

சிறுவந்தாடு முத்துமல்லா ரெட்டியார் பேசுகையில், கால்நடை மருத்துவமனைகளை முறையாக பராமரிக்க வேண்டும், கூட்டுறவு சங்கங்களில் அனைத்து வகை உரங்களையும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

விவசாயி ரங்கராஜ் பேசுகையில், வெள்ளை ரக கரும்புகளை பயிர் செய்ய தனியார் சர்க்கரை ஆலைகள் அனுமதிக்க வேண்டும் என்றார்.

விவசாயி சுப்புராயன் பேசுகையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றார்.கூட்டத்தில் வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன், மேற்பார்வை பொறியாளர்கள் அசோகன், ராமசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜசேகரன், நீர்வளஆதார அமைப்பு செயற்பொறியாளர் ஜெயராம், மண்டல கால்நடை இணை இயக்குனர் அழகரசன், வேளாண் அலுவலர் கதிரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.1.50 லட்சத்துக்கு கடலைக்காய் ஏலம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் மற்றும் கடலைக்காய் ஏலம் நடக்கிறது. அதன்படி, தற்போது கடலைக்காய் ஏலம் நடந்தது.அதில், ராசிபுரம், பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, வெள்ளாளப்பட்டி, மூலப்பள்ளிபட்டி, புதுப்பட்டி மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், கடலைக்காய் அறுவடை செய்து, தலா, 62 கிலோ கொண்ட மூட்டையாக கட்டி, ஏலத்தில் கொண்டு வந்தனர்.நேற்று நடந்த ஏலத்தில், வரக்காய், 85, ஈரக்காய், 26 மூட்டை என மொத்தம், 111 மூட்டைகள் வந்தது. அதில் வரக்காய் அதிக பட்சமாக, 2,265க்கும், தலா, 46 கிலோ கொண்ட ஈரக்காய் குறைந்த பட்சம், 1,550 ரூபாய்க்கும் விற்பனையானது. ராசிபுரம், நாமக்கல் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டர். மொத்தம், ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

### வறட்சியால் பாதித்த விவசாயிக்குநிவாரணம் வழங்க கோரிக்கை

அரூர்: "வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்' என, தெற்கு மாவட்ட தி.மு.க., பொறுப்பாளர் முல்லைவேந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழகத்தில், சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களையும், அரசு, வறட்சி மாவட்டமாக அறிவித்துள்ளது. வறட்சி பகுதிகளை பார்வையிட, அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. ஆனால், இதுவரை வறட்சி பகுதிகளை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவில்லை.கடுமையான வறட்சி காரணமாகவும், அறிவிக்கப்படாத மின் வெட்டு காரணமாகவும், கிணற்றில் உள்ள கொஞ்ச தண்ணீரை பயிர்களுக்கு பாய்ச்ச முடியாத நிலையில், பயிர்கள் வாடிவருகிறது. கால்நடைகளுக்கு தீவனம் வழங்க முடியாமல் விவசாயிகள் அடிமாட்டு விலைக்கு, கால்நடைகளை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த, 12ம் தேதி, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வறட்சியை பார்வையிட அமைச்சர்கள் குழு வருவதை அறிந்து, விவசாயிகள், காலை முதல் மாலை வரை காத்திருந்துஇரவு சில இடங்களை மட்டும் மின் வெளிச்சத்தில், அமைச்சர் குழுவினர் பார்வையிட்டு சென்றனர். விவசாயிகள், தங்கள் பிரச்னைகளை, அமைச்சர் குழுவிடம் தெரிவிக்க முடியாத நிØ ஏற்பட்டுள்ளது. வறட்சி பகுதி ஆய்வு என பெயருக்கு அமைச்சர் குழுவினர் ஆய்வு செய்து விட்டு சென்றிருப்பது, மக்களை ஏமாற்றுவது போல் உள்ளது.அமைச்சர் குழுவினர், பகல் நேரத்தில் பார்வையிட்டு, வறட்சி குறித்த உரிய அறிக்கை அரசுக்கு தெளிவுப்படுத்தி, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், அனைத்து பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பருத்தி உற்பத்தி 3.40 கோடி பொதிகளாக அதிகரிக்கும்

மும்பை:நடப்பு 2012-13ம் பருவத்தில் (அக்.,- செப்.,), நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.40 கோடி பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) அதிகரிக்கும் என, இந்திய பருத்தி கழகம் (சி.ஏ.பீ.,) தெரிவித்து உள்ளது.

**தமிழகம்:**சி.ஏ.பீ., அமைப்பு சென்ற ஜனவரியில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.30 கோடி பொதிகளாக இருக்கும் என, மதிப்பிட்டிருந்தது.இந்நிலையில், ஆந்திரா, கர்நாடகா, தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில், இதன் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இதையடுத்து, நடப்பு பருவத்தில், ஒட்டு மொத்த அளவில், பருத்தி உற்பத்தி, 3.40 கோடி பொதிகளாக உயரும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.

தற்போதைய நிலையில், வட மண்டலங்களில் (பஞ்சாப், அரியானா மற்றும் ராஜஸ்தான்), பருத்தி உற்பத்தி, 60 லட்சம் பொதிகளாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முதலில், 62 லட்சம் பொதிகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டிருந்தது. இதே போன்று, மத்திய மண்டலங்களிலும் (குஜராத், மகாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசம்), பருத்தி உற்பத்தி, 212 லட்சம் பொதிகளிலிருந்து, 179 லட்சம் பொதிகளாக குறையும் என, மதிப்பிடப் பட்டுள்ளது.அதேசமயம், தென் பகுதிகளில், இதன் உற்பத்தி, 76 லட்சம் பொதிகளிலிருந்து, 95 லட்சம் பொதிகளாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**மதிப்பீடு:**ஒட்டு மொத்த அளவில், நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி அளிப்பு, 4.05 கோடி பொதிகளாக (கையிருப்பையும் சேர்த்து) குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, முதலில், 4.13 கோடி பொதிகளாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டிருந்தது.ஆலைகளின் பருத்தி பயன்பாடு, 2.23 கோடி பொதிகளிலிருந்து, 2.45 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேசமயம், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 1.30 கோடி பொதிகளிலிருந்து, 81 லட்சம் பொதி களாக இருக்கும் என, சி.ஏ.பீ., மேலும் தெரிவித்துள்ளது.சென்ற பிப்ரவரி மாதம் முதல், சீனாவில் பருத்திக்கான தேவை அதிகரித்துள்ளது. இதையடுத்து, உள்நாட்டு சந்தைகளில், இதன் விலை, 10 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.எனவே, உள் நாட்டில், இதன் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்திய பருத்தி கழகம், கையிருப்பில் இருந்து, வெளிச் சந்தையில், 2.50 லட்சம் பொதிகளை விற்பனை செய்யும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

20.04.2013 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம் 24 அடியானது



மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கோடை மழை இல்லாததாலும், கர்நாடகா அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படாததாலும், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 95 கன அடியாக இருந்தது.11 மாவட்ட குடிநீர் தேவைக்காக, அணை யில் இருந்து விநாடிக்கு 600 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் காலை 25.12 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 24.99 அடியாக குறைந்தது.

## பவானி கூடுதுறையில் தேங்காய், பழம் விற்பனை உரிமம் ரூ30.82 லட்சத்துக்கு ஏலம்

பவானி,: பவானி சங்கமேஸ்வரர் கோயிலில் பிரசாதம் விற்பனை, எள்ளுக் கிழிகட்டு, ஆன்மிகப் புத்தகம் விற்பனை, கூடுதுறை பகுதியில் தேங்காய், பழம் பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் உரிமங்களுக்கு நேற்று பொது ஏலம் விடப்பட்டது.

நகை சரிபார்க்கும் அலுவலர் நடராஜன், உதவி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பழனிச்சாமி, அதிமுக நகரச் செயலாளர் கிருஷ்ணராஜ், திமுக நகரச் செயலாளர் நாகராஜன், கண்காணிப்பாளர் பாலசுந்தரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏலத்தில், உள்ளூர் மற்றும் வெளியூரைச் சேர்ந்த ஏலதாரர்கள் பலர் கலந்து கொண்டு போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். கடந்த ஆண்டு ரூ.11.57 லட்சத்துக்கு ஏலம் போன பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம், தற்போது ரூ.19 லட்சத்துக்கு 4 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

எள்ளுக்கிழிக்கட்டு விற்பனை செய்யும் உரிமம் ரூ.8 லட்சத்து 11 ஆயிரத்துக்கும், ஆன்மிக புத்தகம் மற்றும் ஒலிநாடா விற்பனை செய்யும் உரிமம் ரூ.2 லட்சத்து 83 ஆயிரத்து 500க்கும் ஏலம் விடப்பட்டது. பவானி கூடுதுறையில் தேங்காய், பழம், பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் உரிமம் இரு ஆண்டுகளுக்கு முன்னர் 8 லட்சத்து 8 ஆயிரத்துக்கு மட்டுமே ஏலம் போயிருந்தது. பலத்த போட்டி காரணமாக கடந்த ஆண்டு ஏலத்தொகை மூன்றரை மடங்கு உயர்ந்து 28 லட்சத்துக்கு போயிருந்தது. இந்த ஆண்டு கடும் போட்டி காரணமாக மேலும் உயர்ந்து கூடுதுறையில் தேங்காய், பழம் விற்பனைக்காக உரிமம் ரூ.30 லட்சத்து 82 ஆயிரத்து 200க்கு நேற்று ஏலம் போயுள்ளது.

முடி சேகரிக்கும் உரிமம் ரூ.30 ஆயிரத்து 500க்கும், கோட்டை விநாயகர் சன்னிதியில் பக்தர்கள் உடைக்கும் சிதறு தேங்காய் சேகரிக்கும் உரிமம் ரூ.6 ஆயிரத்துக்கும், திருக்கோயிலுக்கு சொந்தமான 39 தென்னை மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம் ரூ.5 ஆயிரத்து 600க்கும் ஏலம் போனது.மொத்தமாக ரூ.61 லட்சத்து 22 ஆயிரத்து 800க்கு ஏலம் போனது.

கடந்த ஆண்டு உள்ளூர் ஏலதாரர்களுக்கும், வெளியூரைச் சேர்ந்த ஏலதாரர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில், ஏலம் எடுப்பதில் ஏற்பட்ட போட்டி காரணமாக ஈரோட்டில் பிரபல ரவுடி ஸ்டீல் ரவி கொல்லப்பட்டதையடுத்து அம்மாதிரி அசம்பாவிதம் தவிர்க்க கோயில் வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. ஏலம் நடைபெற்ற கோடி அர்ச்சனை மண்பத்திற்குள் ஏலதாரர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். முன்னதாக, ஏலத்தில்

பங்கேற்க வந்தவர்களின் விவரங்களை போலீசார் சேகரித்தனர். இதனால், ஏலம் நடக்கும் பகுதியில் பரபரப்பு காணப்பட்டது.

### மழையால் தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்பு

குன்னூர், நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டின் துவக்கத்தில் இருந்தே போதிய மழையி ன்மை, கடும்வெயில் உள்ளி ட்ட காரணங்களால் தேயிலை மகசூல் கடந்த ஆண்டைக்கட்டிலும் இந்த ண்டு 30சதவீதம் குறைந்தது.

இதனால் ஏல மையத்துக்கு வரும் தேயிலைத்தூளின் அளவும் குறைந்தது. தேயிலச் செடிகளில் சிவப்பு நிற பூச்சி தாக்குலும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடந்த மாதம் ஒருசில இடங்களில் பெய்த மழையால் தறபோது தேயிலை மகசூல் அதிகரிக்கத் துவங்கி உள்ளது.

இதனால் பெரும்பாலான தேயிலைத்தோட்டங்களில் எதிர்பார்த்ததை விட கூடுதலாக மகசூல் கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவ தும் ஆங்காங்கு பரவலான மழை அவ்வப்போது பெய்து வருவதால் வரும் நாட் களில் தேயிலை மகசூல் பன்மடங்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் இன்று உழவர் பெருவிழா

காஞ்சிபுரம்,: காஞ்சிபுரம் கலெக்டர் சித்திரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 ஒன்றியங்களில் வட்டார மற்றும் வருவாய் கிராம அளவில் உழவர் பெருவிழா இன்று (20ம்தேதி) காலை 9 மணிக்கு நடக்கிறது.

காஞ்சிபுரம் ஒன்றியத்தில் அணைக்கட்டு, புத்தேரி, வாலாஜாபாத் ஒன்றியத்தில் வையாவூர், களியனூர், ஏனாத்தூர், நல்லூர், உத்திரமேரூர் ஒன்றியத்தில் நெய்யாடுபாக்கம், வயலக்காவூர், குண்ணப்பாக்கம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் ஆத்தூர், அனுமந்தை, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நெரும்பூர், அட்டவட்டம், எடையாத்தூர், திருப்போரூர் ஒன்றியத்தில் முள்ளிப்பாக்கம், ராயமங்கலம், பூண்டி ஆகிய பகுதிகளில் உழவர் பெருவிழா நடக்கிறது. மதுராந்தகம் ஒன்றியத்தில் வையாவூர், மப்பேடு, ஜானகிபுரம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் ஆத்தூர், தொழுபேடு, கடமலைபுத்தூர், சித்தாமூர் ஒன்றியத்தில் விளாங்காடு, கொக்கரம்தாங்கல், பவுஞ்சூர் ஒன்றியத்தில் கானத் தூர், பரமன்கேணி, ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் மாத்தூர், பேரிச்சம்பாக்கம், வளத்தாஞ்சேரி, குன்றத்தூர் ஒன்றியத்தில் நடுபட்டு, மலைப்பட்டு, புனித தோமையார்மலை ஒன்றியத்தில் நெமிலிச்சேரி, அஸ்தினாபுரம் ஆகிய பகுதிகளில் உழவர்

பெருவிழா நடக்கிறது. வேளாண்மை துறை அதிகாரிகள் மூன்று குழுக்களாக பிரிந்து முகாமில் பங்கேற்று அடை யாள அட்டைகளை வழங்குகின்றனர். எனவே, விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அதிக மகசூல் பெற வைக்கும் பசுமை, நிழல் குடில்கள் வேளாண்மை

உயர்தொழில்நுட்ப விவசாய முறையான பசுமை குடில் வேளாண்மை மூலம், அதிக மகசூல் மற்றும் அதிக லாபம் அடையாளம் என தோட்டக்கலை மற்றும் உணவு பதனிடுதல் சேவை மையத்தின் இயக்குனர் புஷ்பகுமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:
உயர் தொழில்நுட்ப வேளாண்மை முறையில் பசுமை குடில்கள், நிழல் குடில்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நில அமைப்புகளை கொண்ட விவசாயம் செய்யலாம். இம்முறையில் குடைமிளகாய், தக்காளி, பேபி கார்ன், வெள்ளரிக்காய், பீன்ஸ், வெண்டை போன்ற காய்கறிகளும், ரோஸ் ஜெரிபரா, கார்நேசன் போன்ற மலர் வகை பயிர்களையும் பயிரிடலாம். அனைத்து தட்பவெப்ப நிலைகளுக்கும் ஏற்ற இந்த வகை விவசாயத்தில் நோய் தாக்கம், உரம், பூச்சிக்கொல்லி, தண்ணீர், ஆட்கள் தேவை, மற்ற பாரம்பரிய விவசாயத்தை காட்டிலும் குறைவு. மேலும் 5 முதல் 10 சதவீத விளைச்சலும் அதிகம். இக்குடில் 15 முதல் 20 வருடங்கள் வரை நீடித்து உழைக்கும் திறன் பெற்றது. இதுபோன்ற விவசாயத்திற்கு மத்திய அரசு தோட்டக்கலை வாரியத்தின் வாயிலாக 25 சதவீதம் மான்யம் வழங்குகிறது. அதேபோல நிழல் குடில்கள், 4 முதல் 6 வருடங்கள் வரை நீடித்து உழைக்கும். தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மூலம் ஏக்கருக்கு `10 லட் சம் வரை மானியம் கிடைக் கும். நம் நாட்டில் தற்போது குஜராத் மாநிலத்தில் இம்முறையை பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டு விவசாயிகளும் அந்த முறையை பின்பற்றலாம்.
அனைத்து வகை உயர்தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன வேளாண் முறைகளுக்கு, தேசிய தோட்டக்கலை வாரியத்தின் வாயிலாக வங்கி மூலம் மானியம் பெற்றுத்தருகிறோம். நாம் உற்பத்தி செய்த விளை பொருட்கள் வீணாகாமல் தடுப்பதற்கு குளிர்பதன கிடங்கு அவசியம். எனவே, குளிர்பதன கிடங்கு அமைக்க வங்கி கடன் மற்றும் மானியம் 40 சதவீதம் வரை பெற்றுத்தருகிறோம்.
பசுமை குடில்கள், நிழல் குடில்கள் அமைக்க திசு கல்சர் ஆய்வுக்கூடம், குளிர்பதன கிடங்குகளில் கட்டுமானம், விரிவாக்கம், நவீன மயமாக்குதல் ஆகியவற்றுக்கான மானியத்துடன் கூடிய முதலீட்டு கடனையும் அளித்து வருகிறோம். எங்களது கிளை அலுவலகம் கோவையில்

செயல்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் எங்களது சேவை மையத்தை அணு கலாம். மேலும் விபரங்க ளுக்கு வீலீயீஜீ.லீஷீsuக்ஷீ@ரீனீணீவீறீ.நீஷீனீ என்ற இமெயிலிலும், 41-ஜி, ஜெயலட்சுமி காம்ப்ளக்ஸ், முதல் தளம், தாலுக்கா ஆபீஸ் எதிரில், ஓசூர். 04344- 221648, 9487728648 மற்றும் கிளை அலுவலகம் 43-58ஏ, கே.எம். காம்ப்ளக்ஸ் தெற்கு தெரு, சூரமங்கலம் மெயின்ரோடு, சேலம். 0427- 2442455 என்ற முகவரியிலும் தொடர்புகொள்ளுமாறு இயக்குனர் புஷ்பகுமார் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.04.2013 A.M**

---

## குன்னம் வட்டத்தில் 44 இடங்களில் உழவர் பெருவிழா

குன்னம்,

குன்னம் வட்டத்தில்¢ அடுத்த மாதம் 20-ந் தேதி வரை 44 இடங்களில் உழவர் பெருவிழா நடைபெற உள்ளது.

உழவர் பெருவிழா

குன்னம் வட்டத்தில்¢ மே மாதம் 20-ந் தேதி வரை ஞாயிற்றுக்கிழமை தவிர தொடர்ந்து உழவர் பெருவிழா ஒவ்வொரு நாளும் காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து மாலை வரை நடைபெற உள்ளது.

இந்த உழவர் பெருவிழா நிகழ்ச்சிகளில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, விதைச்சான்று அளிப்புத் துறை, வேளாண் விற்பனைத் துறை, கால்நடை பரா மரிப்புத்துறை, மீன்வளத்துறை, பட்டுவளர்ச்சித் துறை, ஆவின், கூட்டுறவுத்துறை, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் அறிவியல் நிலையம், தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலை, முன்னோடி வங்கி, நபார்டு மற்றும் நீர்வடிபகுதி மேம்பாட்டு முகமை போன்ற 18 துறையை சார்ந்த அலு வலர்களை கொண்டு உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளன.

கருத்து பரிமாற்றம்

இந்த உழவர் பெரு விழாக்களில் விவசாயிகளின் வருமானத்தை பெருக்கு வதற்கும், உற்பத்தி திறனில் உள்ள இடைவெளியினை குறைப்பதற்கும் இரண்டாம் பசுமைப் புரட்சியினை நோக்கி செல்வதற்கான தொழில்நுட்ப செய்திகள் மற்றும் செயல் விளக்கங்கள் செய்து காண்பிப்பதுடன் தொழில் நுட்ப கருத்து பரிமாற்றம் நடைபெற உள்ளது.

உழவர் பெருவிழாக்களில் கலந்து கொள்ளும் விவசாயி களுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்கப்படும். வீடியோ படக்காட்சி மூலம் தொழில்நுட்ப செய்திக்கான படங்கள் திரையிடுவதுடன் வேளாண்மை மற்றும் இதர துறை தொழில்நுட்ப செய்தி களை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வண்ணம் கலைநிகழ்ச்சி, நாடகம் மற்றும் தெருமுனை பிரசாரம் நடத்தப் பட உள்ளது.

ஏப்ரல் மாதம்

குன்னம் வட்டத்தில்¢¢ இன்று (சனிக்கிழமை) கிழுமத்தூர் வடக்கு மற்றும் தெற்கு, 22-ந் தேதி கீழப்பெரம்பலூர், வயலப்பாடி, 23-ந் தேதி வடக்கு மற்றும் தெற்கு, 25-ந் தேதி காடுர் வடக்கு, புதுவேட்டக்குடி, 26- ந்தேதி காடுர் தெற்கு, கொளப்பாடி 27-ந் தேதி பெரியவெண்மணி மேற்கு மற்றும் கிழக்கு 29 -ந்தேதி ஓலைப்பாடி கிழக்கு மற்றும் மேற்கு, 30-ந் தேதி நன்னை மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகளில் உழவர்பெரு விழா நடக்கிறது

மே மாதம்

மே மாதம் 2-ந்தேதி பெருமத்தூர் வடக்கு மற்றும் தெற்கு, 3-ந்தேதி பரவாய் கிழக்கு மற்றும் மேற்கு, 4-ந்தேதி மழவராயநல்லூர் மற்றும் சிறுமத்தூர் 6-ந்தேதி எழுமூர் கிழக்கு மற்றும் மேற்கு, 7-ந்தேதி கீழப்புலியூர் (வடக்கு), 8-ந்தேதி கீழப்புலியூர் (மேற்கு), 9-ந்தேதி ஆண்டிக்குரும்பலூர், 10-ந்தேதி வரகூர், 11-ந் தேதி குன்னம், 13-ந் தேதி அசூர் 14 -ந்தேதி பெரியம்மாபாளையம், 15-ந்தேதி

ஒதியம், 16-ந்தேதி சித்தளி (கிழக்கு) 17- ந்தேதி சித்தளி (மேற்கு) 18- ந்தேதி பேரளி (மேற்கு) 20-ந்தேதி பேரளி (வடக்கு) ஆகிய வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற உள்ளது.

வேண்டுகோள்

வேப்பூர் வட்டார உழவர் பெருவிழா பொறுப்பு அலுவலர்களாக வேளாண்மை அலுவலர் அமிர்தவள்ளியும், துணை வேளாண்மை அலு வலர் ராமச்சந்திரன் பணி யாற்றுகின்றனர்.

இந்த உழவர் பெரு விழாக்களில் உழவர் பெரு மக்கள் கலந்து கொண்டு பயனடைய வேண்டும். என வேப்பூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திர சேகரன் கேட்டுக்கொண்டு உள்ளார்.

## கடமலை&மயிலை ஒன்றியத்தில் இலவம் பஞ்சு விளைச்சல் குறைந்தது விலையும் சரிந்ததால் விவசாயிகள் கலக்கம்

கடமலைக்குண்டு,

கடமலை-மயிலை ஒன்றியத்தில் இலவம் பஞ்சு விளைச்சல் இந்த ஆண்டு குறைந்துள்ளது. விலையும் சரிந்ததால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இலவம் பஞ்சு

தேனி மாவட்டம், கடமலை -மயிலை ஒன்றியத்தில் உள்ள மலைக்கிராமங்களில் கொட்டை முந்திரி மற்றும் இலவம் பஞ்சு சாகுபடி அதிகமாக நடைபெறுகிறது. குறிப்பாக கோரையூத்து, அரசரடி, பொம்ம ராஜபுரம், இந்திராநகர், வெள்ளிமலை, மஞ்சனூத்து, ஒட்டுக்கல், திருப்பூர், முத்தூத்து, காந்தி கிராமம், வாலிப்பாறை, காந்திபுரம் உள்ளிட்ட மலையடிவார கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இலவம் பஞ்சு சாகுபடி செய்யப்பட்டு வரு கிறது. கோடை காலம் தொடங்கும் நேரத்தில் இலவங்காய் விளைச்சல் தொடங்கும். சுமார் 3 மாதங்கள் இலவம் பஞ்சு மகசூல் இருக்கும்.

இந்நிலையில் இந்த ஆண்டு இலவம் பஞ்சு மகசூல் கடந்த ஆண்டை விட மிகவும் குறைவாகவே காணப்படு கிறது. விலையும் சரிவை கண்டுள்ளதால் இலவம் பஞ்சு சாகுபடி செய்துள்ள விவசாயி கள் நஷ்டம் அடைந்துள்ளனர். இந்த பகுதிகளில் விளையும் இலவம் பஞ்சுகளை அதே பகுதிகளில் இருக்கும் மொத்த வியாபாரிகள் விவசாயி களிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து கொள்கின்றனர்.

விவசாயிகள் கலக்கம்

ஆனால் தற்போது விலை சரிந்துள்ளதால் வியாபாரிகள் கொள்முதல் செய்ய முன்வர வில்லை. இதன் காரணமாக கடமலை-மயிலை ஒன்றியத் தில் இலவம் பஞ்சு தேக்கம் அடைந்துள்ளது. ஒரு கிலோ இலவம் பஞ்சு ரூ. 39 முதல் ரூ.42 வரை கொள்முதல் செய்யப்பட்டது. அதேநேரத் தில் கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.65 வரை விற்பனை செய்யப் பட்டது.

ஒரு புறம் விலை சரிவால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்த நிலையில்,கடந்த சில தினங்களாக பெய்த கோடை மழையின் காரணமாக இலவம் பிஞ்சுகள் உதிர்வ துடன், மரத்திலேயே பஞ்சு வெடித்து விடுகிறது. இதனால் விவசாயிகள் கலக்கம் அடைந் துள்ளனர்.